October 23, 2006

மான்புமிகு. பிரதம அமைச்சர் அவர்களே

பள்ளிக்கல்வி, பயன்பாடு, தரம் தொடர்பான கூறுகளைத்  தேசிய அறிவுசார் ஆணையம் தன் கருத்தில் கொண்டுள்ளது.  இந்தியாவை ஒரு அறிவுசார்ந்த நாடாக உருவாக்க உலகளாவிய தரத்தில் பள்ளிக்கல்வி தொடர்பான நீண்ட ஆலோசனையில் இருக்கின்றோம். இனி வரும் நாட்களின் இதன் முடிகளை அரசுக்கு தெரியப்படுத்துவோம். தற்காலத்தில் மத்திய அரசு கல்வி தொடர்பான முடிவுகளை எடுக்க மாநில அரசுக்கு முழு அதிகாரம் வழங்கியுள்ளது. அந்தச் சட்டத்தை நான் நன்கு பரிசீலித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து இருக்கின்றேன். அரசியல் அமைப்புச் சட்டம் 21 ஏ -இன்படி கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம்  பல காரணங்களைக்கொண்டு குறையுள்ளதாக் கருதப்படுகின்றது. மாநிலங்களில் பள்ளிக்கல்வி தொடர்பான ஒரு ஒற்றுமை இருந்தால் இதனை ஆணையம் அங்கீகரிக்கும்.

தற்காலத்தில் மத்திய அரசு தொடர்பான முடிவுகளை எடுக்க மாநில அரசுக்கு முழு அதிகாரம் வழங்கியுள்ளது.  இந்தச் சட்டத்தை நாம் நன்கு பரிசீலித்து சட்ட வல்லநர்களிடம் கலந்தாலோசித்து இருக்கிறோம்.  அரசியலமைப்புச் சட்டம் 21ஏ -இன் படி கொண்டுவரப்பட்ட இச்சட்டம் பல காரணங்களைக் கொண்டு குறையுள்ளதாக கருதப்படுகிறது. மாநிலங்களிடையே பள்ளிக் கல்வித் தொடர்பான ஒரு ஒற்றுமையிருந் தால் இதனை ஆணையம் அங்கிகரிக்கும்.

கீழ்கண்ட திட்டங்களைக் கொண்ட ஒரு திட்டத்தை மத்தியில் கொண்டு வருதல் மூலமாக இந்தப் பிரச்சனை சரிசெய்யப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

1. பிரிவு 21A உள்ளபடி அடிப்படை உரிமையில் ஒன்றாகக் கல்வி கற்கும் உரிமையைத் தேசிய அளவில் கொண்டுவரவேண்டும். ஒரு குடிமகன் சாரந்திருக்கும் மாநிலத்தைச் சார்ந்ததாக இது இருக்க கூடாது. இது அரசியலமைப்பின் மரியாதைக்கு உகந்ததாக இருக்காது.  எனவே பஞ்சாயத்துராஜ்  சட்டம் போலவே கல்விகற்கும் உரிமைச் சட்டத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாநில அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என்று ஒவ்வொரு மாநில அரசையும் வலியுறுத்தியும் அதற்கான நிதியை ஒதுக்குவது தொடர்பாகவும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும்

2. கல்வி கற்பதற்கான உரிமைக்கு மத்திய அரசு போதுமான நிதி ஆதாரத்தைப் பெற்று அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வித் திட்டத்தை செயல்படுத்தலாம் உலகத் தரத்தில் இக்கல்வியை வழங்க தேவைப்படும் பொருள் ஆதாரம் 0.8 சதவிகிதத்தில் இருந்து 2.5 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. சர்வ சிக்சா அபியான் திட்டத்தின் மூலமாகவும் இன்றும் சில மாநிலங்களில் உலகத்தரத்தில் கல்வி வழங்கப்படுவதாலும் தேவைப்படும் பொருள் ஆதாரம் மிகவும் குறைவானதே.

3. குறைந்தது மூன்று ஆண்டுகளுக்குள் உலக தரத்தில் கல்வி வழங்க மாநில அரசு சட்டம் இயற்ற வேண்டும்.  மாதிரிச் சட்டம் எந்த ஒரு கால நிர்ணயத்தையும் குறிப்பிடவில்லை.

4. தரமான கல்வியை வழங்க அனைத்து பள்ளிகளும் நடைமுறைப்படுத்தும் படியான ஒரு கொள்கை அவசியம். மாதிரிச் சட்டத்தில் இது போன்ற கொள்கைகளோ, திட்டங்களோ இல்லை. பள்ளி கொடுக்க வேண்டிய கல்வியின் தரம் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. தரத்தைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல் அறிவுக்கேற்ற தரம் என்கின்ற விளக்கம் மட்டுமே காணப்படுகின்றது. கல்வியின் தரத்தைக் குறிப்பிடுவது மிகவும் கடினம் தரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பள்ளியின் உட்கட்டமைப்பு, மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள், ஒரு பள்ளிக்கு இத்தனை ஆசிரியர்கள், கற்பிக்கும் முறைகள் மற்றும் தேவையான வசதிகளைக் கணக்கில் கொண்டு தரநிர்ணயம் செய்ய வேண்டும்

5. கல்வியின் தரத்தை மதிப்பிடுவதில் ஆசிரியர்களின் குறைந்தபட்ச கல்வித் தகுதி முகவும் முக்கியமானது. மாதிரிச் சட்டம் ஆசிரியர்களின் தகுதி, சிறப்பு, வேலை பார்க்கும்போது அவர்களுக்கு வேண்டிய பயிற்சி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆசிரியர் என்பவர் வகுப்பில் பாடம் நடத்துபவர் என்பது மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் பயிற்சி மற்றும் தகுதியை நிர்ணயிக்க ஒரு திட்டம் மிகவும் அவசியம்.

6. நியாயத்தன்மை:-
அனைத்து உரிமைகளிலும் கல்விகற்கும் உரிமையே சிறப்பானது. இருந்தபோதிலும் மாநில அரசிகளுக்கு அனுப்பப்பட்ட மாதிரிச் சட்டத்தில் குழந்தைக்களுக்கான பொறுப்பு பெற்றோர்களையும், பாதுகாவலர்களையும் சார்ந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசின் பொறுப்பு அங்கீகரிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக தேசிய கிராம வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் இதில் பயன்படுத்தப்படவேண்டும்

குறை தீர்த்தல்:- மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உரிமை கிடைக்காத போது இதனை நீக்குவதற்கு நியாயமான வகையில் பொறுத்தமான சில நிபந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும்.

பள்ளிக்கல்வி என்பது சமுதாயத்தில் பின்தங்கி, நிலமில்லாத, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் பள்ளிகளுக்கு இடையே கலாச்சார, சமூக பொருளாதாரப் பிண்ணனியில் எந்த விதவேறுபாடும் இருத்தல் கூடாது. ஆனால் மாதிரி சட்டத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் அளிக்கபடும் கல்வியால் வேறுபாடுகள் காணப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏராளம்.

எனவே இதனை தவிர்த்து மாணவர்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்ட வளைந் து கொடுக்கும் தன்மை கொண்ட பள்ளி அமைப்பு இன்று தேவையான ஒன்றாக இருக்கின்றது

நாங்கள் நல்ல தரத்தை மட்டுமே எதிர்பார்க்கிறோம் உள்ளூர்மக்கள் நிர்வாக அமைப்புகளில் பங்கெடுக்க வேண்டும். பள்ளிகளில் உண்டாகும் பிரச்சனைகள், பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் தரம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கல்வி எவ்வாறு அமைய

வேண்டும் என்ற பரிந்துரையை NKC அளித்துள்ளது.

நன்றி
சாம் பிட்ரோடா

தலைவர்
தேசிய அறிவுசார் ஆணையம்
cc- ஸ்ரீ.  அர்ஜீன் சிங், அமைச்சர் (மனித வள மேம்பாட்டு அமைச்சகம்)
ஸ்ரீ.மோன்டக் சிங்க அலுவாலிய துணைத் தலைவர், திட்ட குழு